1981 மார்ச் 28]

அரசுப் பணி ஆகியவைகளிலே சேர இருக்கும் வயது வரம் விதிகளில் இருந்து விதவைகளுக்கு விலக்களிக்க வேண்டு மென்ற கருத்தினை அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைத்தான் பதிலில் குறிப்பிட்டேன். செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்று. பரி சீலனை முடிந்த பிறகு உங்களுக்கு நல்ல முறையில் பதில் அளிக்கப் படும் என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினை.

வானொலியில் பேரவை நடவடிக்கை தவறாக அறிவிக்கப் பெற்றது.

திரு. கே. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். நேற்றைய தினம் வானொலியில் நான் பேசியதாகவும், அதிலே நான் பேசும் பொழுது படித்த தாகவும், படித்து வருகின்ற நேரத்தில் சிரித்ததாகவும் வானொலியிலே தொகுப்பு நிகழ்ச்சியிலே குறிப்பிட்டுள்ளார்கள். நான் நேற்றுப் பேசவே இல்லை. ஆனால் வானொலி பற்றி எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. நான் இந்தச் சட்டமன்றத்திலே பல முறை பேசியிருக்கிறேன். என்னுடைய கருத்துக்களை நன்றாக வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர் கள் சொன்ன கருத்து ஏற்புடையதுதான். அவர்கள் சொல்வதில் மாறுபட்ட கருத்து எனக்கு இல்லை. நேற்று திரு. சொக்கலிங்கம் அவர்கள் பேசவில்லை. ஆனால் அதை அவர்கள் உரிமைப் பிரச் சினையாக எழுதிக் கொடுத்தால், அதுபற்றிப் பார்க்கலாம்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் உண்ணாவிரதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பி. ஈஸ்வர மூர்த்தி என்ற சொரணம், ரா, கிருஷ்ணன், கு. ரமணி, எள். வரத ராசன், செ. இராமலிங்கம், இ. எஸ். எம். பக்கீர் முகமது ஆகியோர் "தமிழ்நாடு பூராவுமுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் 14-3-1981 முதல் தங்களது கோரிக்கைகளை அரசிடம் வற்புறுத்தி சென்னை